ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராகப் பணிபுரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள் வரப்பெற்றுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய ஓர் உறுப்பினர் பதவிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் மட்டுமே முறையான வேட்புத் தாள் அளித்துள்ளதால் அவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். அவரது ஆட்சிக் குழு உறுப்பினர் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.